தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்
எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032
தொலைபேசி 044–22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை : திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

ஆணை எண். 01/ந/2024

நாள்.19 .09.2024

திரு. V. பழனிவேலு,
கொறநாடு, மயிலாடுதுறை மாவட்டம் ... முறையீட்டு மனுதாரர்

நகராட்சி ஆணையாளர்,
மயிலாடுதுறை நகராட்சி, மயிலாடுதுறை மாவட்டம் ... எதிர்மனுதாரர்

மயிலாடுதுறை மாவட்டம், கொறநாடு, திருமஞ்சனவீதி, கதவு எண்.48 என்ற முகவரியைச் சேர்ந்த திரு. V.பழனிவேலு என்பவரின் 16.10.2023 நாளிட்ட புகார் மனு இம்முறைமன்ற நடுவத்தில் 19.10.2023ல் பெறப்பட்டு, 01/ந/2024 என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

மயிலாடுதுறை மாவட்டம், கொறநாடு, திருமஞ்சனவீதி, கதவு எண்.48 என்ற முகவரியைச் சேர்ந்த திரு. V.பழனிவேலு என்பவர் தமது 16.10.2023 நாளிட்ட புகார் மனுவில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்:

" 2013ம் ஆண்டு மயிலாடுதுறை நகரம் கூறைநாடு வார்டு 29ல் ந.அ.1000/2எப் மற்றும் சிலவற்றில் பதிவு ஆவணம் மூலம் நான் கிரையம் பெற்று அனுபவித்து வந்த இடத்தின் ஒரு பகுதியை மயிலாடுதுறை பெரிய கன்னாரத்தெருவில் வசித்து வரும் திரு.ஆர்.சிவபுண்ணியம் என்ற வழக்கறிஞர் கிரையம் செய்து கொடுக்க கேட்டதற்கு நான் மறுக்கவே அவருடைய நெருங்கிய உறவினர் திரு.கார்த்திகேயன் என்பவர் மூலம் அக்டோபர் 13ல் போலி உறுப்பினர்களைக்கொண்டு ஒரு சங்கம் ஏற்படுத்தி உடனடியாக எனது சொத்து பப்ளிக் பர்பஸ் சொத்து மேற்படி போலி

சங்கத்தின் அனுபவத்தில் உள்ளதாக கூறி உறுத்துக்கட்டளை வழக்கு தொடுத்து அ.வ.265/13 நீதிமன்ற உத்தரவு பெற்றது தொடர்பான வழக்கு தற்போது மாண்பமை உச்சநீதிமன்றத்தில் சி.ஏ. 8130/2022ல் நிலுவையில் இருந்து வருகிறது. இந்த வழக்கில் 6.5.2022ல் ஸ்டேடஸ்கோ உத்திரவு வழங்கப்பட்ட நிலையில் மேற்படி வழக்கில் ஒரு தரப்பினராக இல்லாத நகராட்சி ஆணையர் என் நீதிமன்ற உத்தரவினை அவமதித்து எனது கம்பி வேலி அடைப்பில் இருந்ததில் ஒரு பூட்டு போட்டும், நீதிமன்ற உத்தரவினை மதிக்காமல் நகர்மன்றத்தில் மேற்படி நீதிமன்ற உத்தரவினை மறைத்து ஒரு தீர்மானம் முன்வைத்தும், மேற்படி சொத்து பொது இடம் என்று ஒரு போர்டு வைத்துள்ளார். மேற்படி வழக்கும், நகர மன்ற நடவடிக்கையும் முற்றிலும் சட்டத்திற்கு புறம்பானதும், மோசடியானதும் என்பதற்கான அடிப்படை ஆதாரங்களை புகாருடன் இணைத்திருக்கிறேன். அந்த வழக்கு பற்றி தற்போது தாவா இல்லை. தற்போதைய புகாருக்கு மேற்கண்ட காரணத்தை எதிர்மனுதாரர்கள் தெரிவிப்பார்கள் என்பதால், எனது சொத்து பற்றிய தாவாவில் நகராட்சியோ தனி நபரோ எவ்வித உரிமையும் கோரமுடியாது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

2, 3 எதிர் தரப்பினர்.

(2) உதவி இயக்குநர், நிலவளவை (ம) ஆவணங்கள்,

(3)உதவி இயக்குநர்(நகர திட்டமிடுதல்) உள்ளாட்சித்துறையின் கீழ் செயல்படுபவர்கள் அல்ல.

ஆனால் அவர்களின் வாய்மொழி உத்தரவின்கீழ் கட்டிடம் கட்டப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளதாலும், 22.12.2019ல் ஒப்படைக்கப்பட்ட கட்டிடம் இதுவரை திறக்காமல் இருந்ததன் காரணமாக கட்டிடம் கட்டப்பட்டதன் நோக்கம் நிறைவேறாததன் காரணமாகவும், தொடர்ந்து வீட்டு வாடகைப்படி வழங்கப்படுவதால் நிதி இழப்பு ஏற்பட்டுள்ளதற்கும் 2, 3 எதிர்தரப்பினர்கள் சரியான தகவல்களை முன்னிலைப்படுத்தும் பொருட்டு இந்தப்புகாரில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

மேலும் மயிலாடுதுறை நகரத்தில் உள்ள பெசன்ட் நகரில் திருத்திய மனைப்பிரிவு எண்.21/1988ல் ரோஜா தெருவின் கீழ்கடைசியில் “open space” என ஒதுக்கீடு செய்யப்பட்ட இடம் வழியாக அப்பகுதிவாசிகள் தென்புறம் செல்வதற்கான பாதையை நகர நில அளவர் கம்பி வேலி வைத்து அடைத்து விட்டதாக புகார் கிடைத்ததால் அப்பகுதியில் குடியிருப்பவர்களிடமிருந்து பெசன்ட் நகர் மனைப்பிரிவு வரைபடம் 21/1988–ல் பெறப்பட்டது. ரோஜா தெருவின் கீழ் கடைசியில் தென்சாரியிலும், எதிரே உள்ள பூங்காவிற்கு வடக்கில் செல்லும் பிரதான சாலையின் வடக்கில் அதிக இடம் open space என்றும் ரோஜா தெருவில் சற்று மேற்கில் தென்புறம் shops என்றும் மனைப்பிரிவில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட இடத்தை பார்வையிட்டதில், ரோஜா தெருவில் கீழ்கடைசியில் உள்ள open spaceல் குறு வட்ட அளவருக்கான குடியிருப்பு மற்றும் அலுவலக கட்டிடமும், அதன் முன்பகுதியில் மற்றொரு கட்டிடம் 2023ல் கட்டப்பட்டு வருவதும் தெரிய வந்தது. அதேபோல் பூங்காவிற்கு வடபுறம் உள்ள open spaceல் ஆர்.சி.சி. பங்களா வீடு ஒன்றும், ரோஜா தெருவில் உள்ள கடைகளுக்கு ஒதுக்கீட்டு இடத்தில் மாடி வீடும் உள்ளது தெரிய வந்தது.

“உயர்நீதிமன்ற உத்தரவிற்கு புறம்பாகவும், சட்டத்திற்கு புறம்பாகவும் open spaceல் நிரந்தர கட்டிடங்கள் கட்டப்பட்டுள்ளது. நகர் ஊரமைப்பு உதவி இயக்குநரின் கடிதம் எண்.210/2013 ம.மா.2 நாள் 28.03.2023ல் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

திறவிடத்தில் கட்டிடம் கட்ட அனுமதி ஏதும் வழங்கப்படவில்லை. மயிலாடுதுறை நகராட்சி ஆணையரிடம் தகவல் கோரப்பட்டதில் பொது தகவல் அலுவலரின் கடித எண்.1115/2023 எப்.2, 21.04.2023ல் கீழ்க்கண்டவாறு தகவல் அளித்துள்ளார்.

நகர சார் ஆய்வாளரின் குறிப்பின்படி பெசண்ட் நகர் மனைப்பிரிவில் திறவிடமாக 9239 ச.அடி இடம் ஒதுக்கப்பட்டுள்ளது. நகர சார் ஆய்வாளரின் குறிப்பின்படி மனைப்பிரிவில் அமைந்துள்ள வார்டு எண்.1, பிளாக் 31 நகரளவு எண்.36 திறவிடத்தில் நில அளவருக்கு குடியிருப்பு கட்டப்படவில்லை. சரக நில அளவர் குடியிருப்பு கட்டிடம் தொடர்பாக பொதுப்பணித்துறையினர் தகவல் கோரப்பட்டதற்கு மயிலாடுதுறை உதவிப்பொறியாளர் கீழ்க்குறிப்பிட்டவாறு தெரிவித்துள்ளார்.

இந்தக்கட்டிடம் ஒரு அரசுத்துறையின் தேவைக்காக கட்டப்பட்டது. இந்த இடத்தை ஒரு அரசுத்துறை இடம் என்று வருவாய்த்துறையினர் நேரடியாக கூறப்பட்டதன் அடிப்படையில் எவ்வித அடுத்த நிலை கேள்விகளும் எழாமல் பணியினை செய்து முடிக்கப்பட்டு உதவி இயக்குநர் மாவட்ட நில அளவை நாகப்பட்டினம் அவர்களிடம் 21.12.2019 அன்று ஒப்படைக்கப்பட்டது.

குறு வட்ட அளவர் குடியிருப்பு, 22.12.2019–ல் கட்டி முடிக்கப்பட்டு இதுநாள் வரையில் திறக்கப்படாமல் உள்ளது. எனவே, எந்த குறு வட்ட அளவரும் குடியிருக்கவில்லை. இதுநாள்வரையில் எந்த குறுவட்ட அளவருக்கும் மாத ஊதியத்தில் வீடு வாடகைப்படி பிடித்தம் செய்யப்படவில்லை.

open space என்ற இடத்தில் Dereservation செய்யாமலும் நகராட்சியில் கட்டிட அனுமதி பெறாமலும் கட்டப்பட்டுள்ள தனியார் ஆர்.சி.சி. கட்டிடங்கள் கடைகளுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட இடத்தில் கட்டப்பட்டுள்ள கட்டிடத்தையும் உடனடியாக அகற்ற வேண்டும். மேலும் 21.12.2019ல் ஒப்படைக்கப்பட்ட கட்டிடத்தை இதுவரை பயன்படுத்தாமல் இருப்பதால் ஏற்பட்ட நிதி இழப்பினை சம்பந்தப்பட்ட நபர்கள் அரசுக்கணக்கில் செலுத்த உத்தரவிட வேண்டி சார்ந்த துணைத்தலைவருக்கு உத்தரவிடவேண்டும்.

குறுவட்ட அலுவலர் குடியிருப்பு அலுவலகத்திற்கு முன்பக்கம் 2023ல் கட்டியது யார் என்பதை கண்டறிந்து அவர்கள் மீது நடவடிக்கை எடுப்பதுடன் அந்த கட்டிடத்தை அகற்ற உத்தரவிட வேண்டுகிறேன்" என தனது புகார் மனுவில் தெரிவித்துள்ளார்.

2. மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர்களான ஆணையாளர், சுகாதார ஆய்வாளர் மற்றும் நகரமைப்பு ஆய்வாளர் ஆகியோர்களை 23.07.2024 அன்று நடைபெறவிருக்கும் விசாரணைக்கு வருகை தந்து விளக்கம் அளிக்குமாறு இம்முறைமன்ற நடுவ 11.07.2024 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன. விசாரணைக்கு வரும்போது புகார் மனு தொடர்பான முழு விவர அறிக்கையுடன் வருமாறு ஆணையாளர் அறிவுறுத்தப்பட்டார்.

3. மனுதாரர் திரு.V.பழனிவேலு 23.07.2024 ம் தேதிய விசாரணையில் இம்முறைமன்ற நடுவத்தில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்:

" மயிலாடுதுறை நகராட்சியில் பெசண்ட் நகரில் திறவிடத்தில் குடியிருப்பு மற்றும் நில அளவர் குடியிருப்பு மற்றும் தனியார் குடியிருப்பு கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளது. நில அளவர் குடியிருப்பு கட்டடத்தில் யாரும் குடியிருக்கவில்லை. இதனால் அரசுக்கு நிதி இழப்பு ஏற்பட்டுள்ளது. பொது இடத்தில் கட்டடம் கட்ட உரிய அனுமதி பெறவில்லை. கடைகளுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள இடத்தில் பாலசுப்பிரமணியம் என்பவருக்கு குடியிருப்பு கட்ட அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இதற்கான விதிமுறைகள் என்ன என கேட்டுக்கொள்கிறேன். திருமதி. செல்வசுந்தரி என்பவர் திறவிடத்தில் 1100 சதுர அடியில் ஆக்ரமணம் செய்துள்ளது குறித்த புகார் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கையை தெரிவிக்க கோருகிறேன். மயிலாடுதுறை நகராட்சி ஆணையர் தனது கடித எண்.1115/2022 நாள் 21.04.2023ல் நில அளவருக்கு குடியிருப்பு கட்டடம் கட்டவில்லை என தெரிவித்துள்ளார். ஆனால் திறவிடத்தில் சரக அளவர் குடியிருப்பு கட்டடம் கட்டப்பட்டுள்ளது. ஆனால் யாரும் குடியிருக்கவில்லை. வீட்டு வாடகை வழங்கிய காரணத்தால் நிதி இழப்பு ஏற்பட்டுள்ளது என்றும், இக்கட்டடத்திற்கு நகராட்சி அனுமதி வழங்கப்பட்டுள்ளதா அல்லது இல்லையா என்பதும் தெரியவில்லை. மேற்கண்ட புகார்களை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் அவர்கள் முன் நேரில் தெரிவித்துள்ளேன்" என கூறியுள்ளார்.

4. மயிலாடுதுறை நகராட்சி ஆணையர், சுகாதார ஆய்வாளர் மற்றும் நகரமைப்பு ஆய்வாளர் 23.07.2024 அன்றைய விசாரணையில் இம்முறைமன்ற நடுவத்தில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தங்களது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளனர்.

" மயிலாடுதுறை எல்லைக்குட்பட்ட மனைப்பிரிவு அனுமதி எண். ம.பி.வ./ம(நிது எண்.21/88–ல் பொது ஒதுக்கீடு பகுதிகளில் திறவிடம் என 3 எண்ணிக்கையிலான இடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. அவற்றில் (1) புதிய சர்வே ஆவணங்களின்படி வார்டு எண்.1, பிளாக் எண்.32, நகரளவு எண்.35 மற்றும் 36ல் திறவிடம் என ஒதுக்கப்பட்ட பகுதியில் 4.2 மீ x 10 மீ பரப்பளவில் தகர சீட் கட்டடம் " தமிழ்நாடு நில அளவர் அலுவலர் ஒன்றிப்பு" அரசு ஊழியர் சங்கத்தால் கட்டப்பட்டுள்ளது. மேலும் திரு.பழனிவேலு என்பவரால் குறிப்பிடப்பட்டுள்ள வருவாய் ஆய்வர் குடியிருப்பு கட்டிடம் வார்டு எண். 1 பிளாக் 32 நகரளவு எண்.36 –அரசு புறம்போக்கு என வகைப்படுத்தப்பட்ட இடத்தில் பொதுப்பணித்துறையால் கட்டப்பட்டுள்ளது. நகராட்சி வசம் ஒப்படைப்பு செய்யப்பட்ட திறவிடம் வகைப்படுத்தப்பட்ட இடத்தில் கட்டப்படவில்லை என்று தெரிவித்துள்ளார்.

திறவிடம் என வகைப்படுத்தப்பட்டுள்ள பிரிவு ஒன்றில் திருமதி.அன்புமொழி க/பெ. கே.குமார் என்பவர் நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களின் ந.க.எண்.2697/2005/எல்எ, நாள் 12.09.2007ல் குடியிருப்பு மனையாக மாற்றம் செய்யப்பட்டு ம.வ./ந.ஊ.இ.எண்.121/2007ல் அனுமதி வழங்கப்பட்டதன் பேரில் நகராட்சி ஆணையரால் உள்ளூர் திட்ட குழும தீர்மான எண்.31, நாள் 31.03.2008ன்படி கட்டிட அனுமதி எண்.221/2008/எப்2, நாள் 31.03.2008ல் கட்டிடம் கட்ட அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

பெசன்ட் நகர் பிரிவில் பொது ஒதுக்கீடுகள் உள்ள சாலைகள், திறவிடங்கள் 3 எண்ணிக்கை, பூங்காக்கள் 2 எண்ணிக்கை மற்றும் குழந்தைகள் விளையாடும் இடம் ஆகியவை நகர ஊரமைப்பு ஆணையர்(பொ) அவர்களின் கடிதத்தின் பேரில் 10 சதவீதம் மட்டுமே

தானபத்திரமாக பெற்றுக்கொள்ள தெரிவித்ததன் பேரில், இப்புகார் தொடர்பான திறவிடம் எண்,3ல் 1860.50 சதுரடி இடம் பத்திர நகல் எண்.689/2007 நாள் 11.04.2007 மூலம் நகராட்சிக்கு ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது. அதில் திறவிடமாக ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ள திறவிடம் எண்.3–ல் ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ள 1860.50 சதுர பரப்பளவில் தற்போது திறவிடப்பகுதியில் திருமதி அன்புமொழி க/பெ.கே. குமார் என்பவர் சுமார் 524.50 சதுரடி பரப்பளவில் தற்காலிக சுற்றுச்சுவர் அமைத்து தோட்டமாக பயன்படுத்தி வருகிறார்.

மேலும் முக்கோண அளவில் சுமார் 51 சதுரடி இடத்தில ஆர்.சி.சி.கட்டிடம் மற்றும் ஏசி சீட் கார் செட் அமைத்து 780 சதுரடி ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளது. ஆக்கிரமிப்பு தொடர்பாக அறிவிப்பு வழங்கப்பட்டதன் பேரில் ஏசி சீட் கார் செட் அகற்றப்பட்டுள்ளது. பெசன்ட் நகர்பிரிவில் பொது ஒதுக்கீடுகள் உள்ள சாலைகள், திறவிடங்கள் 3 எண்ணிக்கை, பூங்காக்கள் 2 எண்ணிக்கை மற்றும் குழந்தைகள் விளையாடும் இடம் ஆகியவை நகர ஊரமைப்பு ஆணையர்(பொ) அவர்களின் கடிதத்தின் பேரில் 10 சதவீதம் மட்டும் தானபத்திரமாக பெற்றுக்கொள்ள தெரிவித்ததின்பேரில் இப்புகார் தொடர்பான திறவிடம் எண்.3ல் 1860.50 சதுரடி இடம் தானபத்திரமாக ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது.

கடைகள் என ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள பகுதியில் திரு.டி. பாலசுப்பிரமணியன் த/பெ. தர்மலிங்கம் என்பவர் குடியிருப்பு வீடு கட்டி வசித்து வருகிறார். மனை உரிமையாளர் கட்டிட அனுமதி எண்.187/2001, நாள் 29.03.2001ல் கடை கட்டிடம் கட்ட நகராட்சியால் அனுமதி பெற்றுள்ளார். திரு.வி.பழனிவேலு, ஆகிய புகார்தாரர் மகன் திரு.பிரதான்பாபு அங்கீகரிக்கப்பட்ட நாச்சிமுத்து நகர் என்ற மனைப்பிரிவில் பொது உபயோகம் (Public purpose) என வகைப்பாடு செய்யப்பட்டுள்ள இடத்தினை கிரையம் பெற்று பயன்படுத்தி வருவது தொடர்பாக அம்மனைப்பிரிவு குடியிருப்போர் நலசங்கத்திற்கு எதிராக உச்சநீதிமன்றத்தால் வழக்கு தொடர்ந்து வழக்கு எண் Special Leave to Appeal © No.(s) 8130/2022–ல் 06.05.2022ம் தேதிய உத்தரவின்படி Maintain status quo என உத்தரவு பெற்றுள்ளார். இந்நிலையில் இவ்வழக்கில் நகராட்சி ஆணையரை மூன்றாம் பிரதிவாதியாக சேர்த்து ஆணையிடப்பட்டு 31.07.2024 அன்று இவ்வழக்கு மீண்டும் உச்சநீதிமன்றத்தால் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளது என்ற விபரம் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது" என பதிவு செய்துள்ளார்கள்.

மனுதாரரின் புகார் மனு மற்றும் மனுவுடன் இணைத்தனுப்பப்பட்ட ஆவணங்கள் மற்றும் அவரது வாக்குமூலம், மயிலாடுதுறை நகராட்சி ஆணையரின் வாக்குமூலத்துடன் அளிக்கப்பட்ட 23.07.2024 நாளிட்ட அறிக்கை மற்றும் ஆவணங்கள் ஆகிய அனைத்தும் இம்முறைமன்ற நடுவத்தினால் மிகக்கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன. பரிசீலனையில் கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன:–

1) மனுதாரர் தனது வாக்குமூலத்தில், நில அளவர் குடியிருப்பு கட்டிடத்தில் யாரும் குடியிருக்கவில்லை என்றும் அதனால் அரசுக்கு நிதி இழப்பு ஏற்படுவதாகவும் கடைகளுக்காக ஒதுக்கப்பட்ட இடங்களில் குடியிருப்பு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகவும் திறவிடப்பகுதி திருமதி. செல்வசுந்தரி என்பவரால் ஆக்ரமணம் செய்யப்பட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

a) திரு.பாலசுப்பிரமணியன், என்பவர் கடைகள் என ஒதுக்கீடு செய்யப்பட்ட பகுதியில் மனை உரிமையாளர் அனுமதி கடை கட்டப்பெற்று குடியிருப்பு வீடு கட்டியுள்ளார்.

b) மயிலாடுதுறை நகராட்சி எல்லைக்குட்பட்ட மனைப்பிரிவு அனுமதி எண்.ம.பி.வ.ம.(நிது) எண்.21/88–ல் பொது ஒதுக்கீடு பகுதிகளில் திறவிடம் என 3 எண்ணிக்கையிலான இடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. அவற்றில் புதிய சர்வே ஆவணங்களின்படி வார்டு எண்.1, பிளாக் எண்.32, நகரளவு எண்.35 மற்றும் 36–ல் திறவிடம் என ஒதுக்கப்பட்ட பகுதியில் 4.2 மீ x 10 மீ பரப்பளவில் தகர சீட் கட்டடம் "தமிழ்நாடு நில அளவர் அலுவலர் ஒன்றிப்பு'' என்ற அரசு ஊழியர் சங்கத்தால் கட்டப்பட்டுள்ளது.

c) திருமதி. அன்புமொழி க/பெ. குமார் என்பவர் திறவிடப் பகுதி ஒன்றில் நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களின் அனுமதி பெற்று திறவிடப்பகுதியினை குடியிருப்பு மனையாக மாற்றம் செய்து உள்ளூர் திட்டக்குழும தீர்மானத்தின் பேரில் கட்டிட அனுமதி பெற்றுள்ளார். மேலும் மற்றொரு திறவிட பகுதியில் அவரால் ஏசி சீட் கார் செட் மூலமாக ஆக்ரமணம் செய்யப்பட்ட 780 சதுர அடியில் இருந்து எனினும், அவர் திறவிடப்பகுதியில் 524.50 சதுர அடிகளை தோட்டமாகவும் 51 சதுர அடிகளை ஆர்சிசி கட்டிடம் மூலமாகவும் ஆக்கிரமிப்பு செய்துள்ளார்.

d) திருமதி.செல்வசுந்தரி என்பவர் திறவிட பகுதியில் 1100 சதுர அடிகளை தோட்டமாக ஆக்கிரமிப்பு செய்துள்ளார் என்று தெரிவித்துள்ளார்.

2) இதுகுறித்து நகராட்சி ஆணையாளர் தனது வாக்குமூலத்தில் வருவாய் ஆய்வர் குடியிருப்பு கட்டிடம் திறவிடப்பகுதியில் கட்டப்படவில்லை, புறம்போக்கு என வகைப்படுத்தப்பட்ட இடத்தில் கட்டப்பட்டுள்ளது என்று தெரிவித்துள்ளார்.

3) இந்நேர்வில் நகராட்சி ஆணையரின் அறிக்கை வாயிலாக வருவாய் ஆய்வர் குடியிருப்பு கட்டிடம் திறவிடப்பகுதியில் கட்டப்படவில்லை, புறம்போக்கு என வகைப்படுத்தப்பட்ட இடத்தில் கட்டப்படடுள்ளது என்பது தெரியவருகிறது. குறுவட்ட அலுவலர் குடியிருப்பு 22.12.2019–ல் கட்டி முடிக்கப்பட்டு இதுவரை பயன்படுத்தாமல் இருப்பதாக தெரிய வருகிறது. அரசாங்கத்திற்கு நிதி இழப்பு ஏற்படாவண்ணம், கட்டி முடிக்கப்பட்ட அரசு கட்டிடத்தை பயன்பாட்டிற்கு கொண்டு வரவேண்டிய துறை பொதுப்பணித்துறை ஆகும். எனவே பொதுநன்மை கருதி இந்நேர்வினை ஆணையர், மாவட்ட ஆட்சித்தலைவர் கவனத்திற்கு கொண்டு செல்ல அறிவுறுத்தப்படுகிறார்.

4) திருமதி. அன்புமொழி, செல்வசுந்தரி, என்பவர்களாலும் தமிழ்நாடு நில அளவர் அலுவலர் ஒன்றிப்பு என்ற சங்கத்தால் திறவிட பகுதியில் ஆக்ரமணம் செய்யப்பட்டுள்ளதும் நகராட்சி ஆணையர் அவர்களின் அறிக்கை மூலம் தெரிய வருகிறது.

5) மயிலாடுதுறை நகராட்சி எல்லைக்குட்பட்ட மனைப்பிரிவு அனுமதி எண்.ம.பி.வ..ம(நிது) எண். 21/88–ல் பொது ஒதுக்கீடு மற்றும் திறவிடப்பகுதிகளுக்கு ஒதுக்கப்பட்ட இடங்கள் பிரிவு 41 மற்றும் 47 Tamilnadu Combined Development and Building Rule -2019 –ல் குறிப்பிடப்பட்டுள்ள வரையறைகளை பின்பற்றி ஒதுக்கப்பட்டுள்ளதா என்பது குறித்தும் அவ்வாறு ஒதுக்கீடு செய்யப்பட்ட இடங்கள் பிரிவு 47 Tamil Nadu

Combined Development and Building Rule 2019க்கு மாறாக ஒதுக்கிய பயன்பாட்டிற்கு அல்லாமல் பிற பயன்பாட்டிற்கு பயன்படுத்தப்படுகிறதா என்பது குறித்தும், நகராட்சி ஆணையரின் அறிக்கையில் குறிப்பிட்டுள்ள திறவிடங்களில் உள்ள ஆக்கிரமிப்புகள் தொடர்பாகவும் அது தவிர வேறு ஆக்கிரமிப்புகள் உள்ளதா என்பது குறித்தும் வருவாய்த்துறையினருடன் முழுமையான கள ஆய்வு செய்து அவ்வாறான ஆக்கிரமிப்புகள் இருப்பது கண்டறியப்பட்டால் சட்டவிதிகளுக்குட்பட்டும், மாண்பமை உயர்நீதிமன்ற அறிவுறுத்தல்களின்படியும் தொடர் நடவடிக்கையினை எடுக்குமாறு மயிலாடுதுறை நகராட்சி ஆணையாளர் அறிவுறுத்தப்படுகிறார்.

2024ஆம் ஆண்டு, செப்டெம்பர், திங்கள் 19–ம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1)திரு.V.பழனிவேலு, எண்.48, திருமஞ்சனவீதி,
கொறநாடு, மயிலாடுதுறை – 609 001.
மயிலாடுதுறை மாவட்டம்.

2)நகராட்சி ஆணையர்,
மயிலாடுதுறை நகராட்சி,
மயிலாடுதுறை.
மயிலாடுதுறை மாவட்டம்

3)நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,
எம்.ஆர்.சி.நகர், சென்னை – 600 028.

நகல்: மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களின் தனிச் செயலர்

இ.கோ/உதிரி

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

தமிழ்நாடு மாநில உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்ற நடுவம் சென்னை–600 032

செயலாளர் (முகூபொ)
23/9/24